**QUESTION 1.** Unanswered

குடும்பத்திற்கு விளக்காக விளம்பிநாக னா ர் யாரைக் கு றி ப் பி டுகிறார் ?

A. பெண்

B. தலைவன்

C. பிள்ளைகள்

D. சான்றோர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 2.** Unanswered

பொருளறிந்து பிழையான தொடரினைத் தேர்ந்தெடு .

A. பிறர்பொருளைக் கள்ளாமை வேண்டும் .

B. தமக்குத் தகுதியுடைய , முழுக்கங்களை தள்ளாமை வேண்டும் .

C. நல்லினத்தாரோடு நள்ளாமை வேண்டும் .

D. யாரிடத்திலும் பகை கொள்ளாமை வேண்டும் .

E. விடை தெரியவில்லை

**QUESTION 3.** Unanswered

தான்செல் உலகம் - இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது ?

A. தான் பிறந்த நாடு

B. சுற்றுலாச் செல்லும் இடங்கள்

C. மறுமை உலகம்

D. பகைவர் நாடு

E. விடை தெரியவில்லை

**QUESTION 4.** Unanswered

இலக்கணக்குறிப்பு தருக   நெல்லுங் கரும்பும் .

A. வினைத்தொகை

B. உம்மைத்தொகை

C. பண்புத் தொகை

D. எண்ணும்மை

E. விடை தெரியவில்லை

**QUESTION 5.** Unanswered

“ உண்டி அருக்கும் ” என்பதன் பொருள் என்ன ?

A. விலையுயர்ந்த உணவை உண்ணுதல்

B. உணவை முழுமையாகத் தவிர்த்தல்

C. மற்றவர்களுக்கு உணவளித்தல்

D. உணவைச் சுருக்கிக் கொள்ளுதல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 6.** Unanswered

“ நட்டார் ” என்பதன் எதிர்ப்பதம் தருக ?

A. செற்றார்

B. இளைஞர்

C. ஒறுத்தார்

D. பொறுத்தார்

E. விடை தெரியவில்லை

**QUESTION 7.** Unanswered

' கள்வம் ' , ' செய்வம் ' ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு தருக .

A. முதனிலைத் தொழிற்பெயர்கள்

B. வியங்கோள் வினைமுற்றுகள்

C. தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றுகள்

D. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்கள்

E. விடை தெரியவில்லை

**QUESTION 8.** Unanswered

கள்வம் என்பார்க்கும் துயில் இல்லை ; காதலிமாட்டு உள்ளம் வைப்பார்க்கும் துயில் இல்லை ;

என்னும் நான்மணிக்கடிகை பாடலடிகள் உணர்த்தும் மனிதவாழ்வின் நோக்கம் எது?

A. தூக்கமின்மை .

B. நிலையிலாப் பொருளின் மீதான நாட்டம்

C. மெய்ப்பொருள் காணுதல்

D. ஒண்பொருள் காத்தல் வேண்டும் .

E. விடை தெரியவில்லை

**QUESTION 9.** Unanswered

நான்மணிக்கடிகை பற்றிய தவறான கூற்றினைத் தேர்ந்தடு.

A. நான்கு வகையான மணிகளால் கோர்க்கப்பட்ட ஒருவகை அணிகலனைப்போல் பாடல்தோறும் நான்கு நீதிகளைக் கொண்ட நூல் .

B. நூறு வெண்பாக்களால் ஆன நூல் . இதில் மாணவர்தம் பருவத்திற்கேற்ப நீதிகளும் உண்மைகளும் மிளிர்வது சிறப்பு

C. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலை இயற்றிய விளம்பிநாகனார் கடைச் சங்க காலத்தைச் சேர்ந்தவர் .

D. நிலையிலாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்வைப் பொருளற்றது என்று குறிப்பிடுகிறது,

E. விடை தெரியவில்லை

**QUESTION 10.** Unanswered

இலக்கணக்குறிப்பு தருக ' வைப்புழி '

A. வினைத்தொகை

B. ஏழாம் வேற்றுமைத்தொகை

C. இரண்டாம் வேற்றுமைத்தொகை

D. பண்புத்தொகை

E. விடை தெரியவில்லை

**QUESTION 11.** Unanswered

" வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை "- என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?

A. நான்மணிக்கடிகை

B. நாலடியார்

C. ஏலாதி

D. பழமொழி நானூறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 12.** Unanswered

' சுரையாழ அம்மி மிதப்ப ' என்னும் பழமொழி நானூறு பாடலடிகள் உணர்த்தும் பொருள் யாது ?

A. கல்வி கற்றவரே உயர்ந்தவர்

B. உலக இயல்பு எப்போதும் மாறாது

C. செல்வம் அழிந்து விடும்

D. தகுதியற்றவர்கள் உயர்வதும் தகுதியுடையோர் தாழ்வதும் காலக் கொடுமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 13.** Unanswered

'____________ - தெள்ளிதின் ஆராய்ந்து... அமைவுடைய கற்பவே நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து' - எனும் நாலடியார் பாடலில் பயின்று வந்துள்ள அணி எது?

A. சிலேடை அணி

B. எடுத்துக்காட்டு உவமை அணி

C. உவமை அணி

D. உருவக அணி

E. விடை தெரியவில்லை

**QUESTION 14.** Unanswered

' கல்வி கரையில ' – எனத் தொடங்கும் நாலடியார் பாடலடிகள் உணர்த்தும் மையக்கருத்து யாது ?

A. வயதான காலத்திலும் கற்க வேண்டும்

B. அனைத்து நூல்களையும் கற்க வேண்டும்

C. மேலோட்டமாகப் படிக்க வேண்டும் .

D. முக்கியமான நூல்களைத் தேர்த்தெடுத்து ஆராய்ந்து கற்க வேண்டும் .

E. விடை தெரியவில்லை

**QUESTION 15.** Unanswered

திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மன் – இத்தொடரில் பயின்று வந்துள்ள வழுவமைதி எது ?

A. எண் வழுவமைதி

B. பால் வழுவமைதி

C. கால வழுவமைதி

D. திணை வழுவமைதி

E. விடை தெரியவில்லை

**QUESTION 16.** Unanswered

தவறான இணையைத் தேர்ந்தெடு

**( பாடலடிகள் )** **( இடம்பெற்றுள்ள நூல் )**

A. நல்லா ரெனத்தாம் நனிவரும்பிக் கொண்டா ரை - நாலடியார்

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்

B. ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார் - பழமொழி நானூறு

நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு .

C. தானங் கொடுக்குக் தகைமையு மானத்தரர் - இன்னா நாற்பது

குற்றங் கடிந்த வொழுக்கமுந் - தெற்றெனப்

D. தன்னை வியந்து தருக்கலுற் தாழ்வின்றிக் - திரிகடுகம்

கொன்னே வெகுளி பெருக்கலும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 17.** Unanswered

தூற்றின்கண் தூவிய வித்து - இத்தொடரில் ' புதர் ' என்னும் பொருள் தரும் சொல் எது ?

A. தூறு

B. கண்

C. தூவி

D. வித்து

E. விடை தெரியவில்லை

**QUESTION 18.** Unanswered

சிறுபஞ்சமூலம் பற்றிய சரியானக் கூற்றுகளைத் தேர்ந்தெடு .

I. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று . இதன் ஆசிரியர் காரியாசான் .

II. கடவுள் வாழ்த்து நீங்களாக தொண்ணுற்றேழு வெண்பாக்கள் உள்ளன .

III. சிறுபஞ்ச மூலம் - என்று ஐந்து சிறிய பூக்கள் அன்று பொருள்படும் . அவையாவன சிறுவழு துணை , கண்டங்கத்திரி , நெருஞ்சி , சிறுமல்லி , பெருமல்லி , என்பனவாம் .

IV. சிறுபஞ்சமூலமும் ஏலாதியும் சமகாலத்தில் , இயற்றப்பட்டவை

**குறியீடுகள்**

A. I மற்றும் IV மட்டும்

B. I, II மற்றும் III மட்டும்

C. IV மற்றும் III மட்டும்

D. மேற்கண்ட அனைத்தும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 19.** Unanswered

"-------------------------------- - இருள்தீரக் கூறப்படும் குணத்தான் கர்வேல்வல் வேந்தனால் தேறப்படும் குணத்தி னான்" - என்னும் இப்பாடலடியில் ஒரு சிறந்த தலைவனின் தகுதியாகக் கீழ்க்கண்டவற்றுள் எது கூறப்படவில்லை?

A. இடுக்கண் வந்த காலத்தில் அஞ்சாமை

B. இரக்கம்

C. பகைவரை அழித்தல்

D. அறம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 20.** Unanswered

" சாதல் பொருள் கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல் "

என்னும் பாடலடியில் உள்ள ' புணர்வு உவத்தல் ' என்பதன் சரியான பொருள் யாது ?

A. நண்பர் பிரியும் காலத்தில் உள்ளம் கலங்குதல்

B. நண்பர் வருந்தும் போது தாமும் வருந்துதல்

C. நண்பர்களுடன் கூடியிருத்தலை விரும்புதல்

D. நண்பருடன் இன்சொல் கூறி மகிழ்தல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 21.** Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I . . இந்நூல் உலக வசனம் என்று அமைக்கப்படுகிறது .

II. தமிழறிஞர்களால் நாலடியாருக்கு இணையாக வைத்து மதிப்பிடப்படுகிறது .

III. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் , தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் நாகரிகம் , பண்பாடு , பழக்க வழக்கம் , மன இயல்பு ஆகியவற்றை அறிவதற்குரிய செய்திக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன .

மேற்கண்ட கூற்றுகளால் அறியப்படும் நூல் எது ?

A. நான்மணிக்கடிகை

B. திரிகடுகம்

C. திருக்குறள்

D. பழமொழி நானூறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 22.** Unanswered

கற்றலின் __________ __________ சிறந்தன்று - சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்து பாடலை நிறைவு செய்க.

A. கற்றது மறவாமை

B. வாய்மை யுடைமை

C. கற்றாரை வழிபடுதல்

D. கண்ணஞ்சப் படுதல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 23.** Unanswered

அறவுரைக்கோவையில் சிறந்த பத்து எனப்படுவது ____________

A. சிறந்த பொருள்களை எவ்வாறு அறிவது என்பதைக் கூறும் அதிகாரம்

B. எவையெல்லாம் நீங்காது என்பதைச் சொல்லும் அதிகாரம்

C. எவையெல்லாம் நீங்காது என்பதைக் கூறும் சிறந்த பத்து பாடல்களைக் கொண்ட அதிகாரம்.

D. சிறந்தனவாகிய பத்துப் பொருளைக் கூறும் அதிகாரம்.

E. விடை தெரியவில்லை

**QUESTION 24.** Unanswered

சென்னீர் அருவி மலைநாடர் பாய்பவோ என்னும் பாடலில் ' பாய்வவோ ' என்பதில் உள்ள ' ஓ ' என்ற எழுத்து எதனைக் குறிக்கிறது ?

A. வினா

B. அச்சம்

C. வியப்பு

D. எதிர்மறை

E. விடை தெரியவில்லை

**QUESTION 25.** Unanswered

முதுமொழிக் காஞ்சியில் , ஒருவரைத் தண்டிப்பதை விட மேலானது எது என மதுரைக் கூடலூர்கிழார் குறிப்பிடுகிறார் ?

A. அவரை மன்னித்து விடுதல்

B. அவருக்கு நன்மை செய்தல்

C. அவரிடமிருந்து விலகி இருத்தல்

D. அவருக்கு அறிவுரை கூறுதல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 26.** Unanswered

பொருத்துக

| (நூல்) | (நூலாசிரியர்) |
|---|---|
| a) திரிகடுகம் | 1. ஔவையார் |
| b) திணைமாலை நூற்றைம்பது | 2. நல்லாதனார் |
| c) பழமொழி நானூறு | 3. காரியாசன் |
| d) நல்வழி | 4. கணிமேதாவியார் |
| e) சிறுபஞ்சமூலம் | 5. முன்றுரை அரையனார் |

குறியீடுகள்:

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A. | 2 | 3 | 4 | 5 | 1 |
| B. | 2 | 4 | 5 | 3 | 1 |
| C. | 2 | 4 | 5 | 1 | 3 |
| D. | 2 | 5 | 4 | 1 | 3 |

E. விடை தெரியவில்லை


https://t.me/currentaffiars007

**QUESTION 27.** Unanswered

ஏலாதி என்னும் மருந்துப்பொருளில் இடம்பெற்றுள்ள ஆறு மூலிகைகளுள் பொருந்தாதது எது ?

A. ஏலம் , இலவங்கம்

B. சிறுநாவற்பூ , சுக்கு

C. மிளகு , திப்பிலி

D. சிறுமல்லி , பெருமல்லி

E. விடை தெரியவில்லை

**QUESTION 28.** Unanswered

ஏலாதி நூல் சிறப்புப்பாயிரம் மற்றும் தற்சிறப்புப்பாயிரம் உட்பட மொத்தம் எத்தனை வெண்பாக்களைக் கொண்டுள்ளது ?

A. 100

B. 108

C. 81

D. 102

E. விடை தெரியவில்லை

**QUESTION 29.** Unanswered

ஏலாதி குறிப்பிடும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே உரிய மூன்று பண்புகளுள் பொருந்தாதது எது ?

A. வறியவருக்குப் பொருளை அளித்தல்

B. உலகப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல்

C. எவ்வுயிரினையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல்

D. உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றி இருத்தல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 30.** Unanswered

இல்லார்க் கொன் றீயும் - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் எது ?

A. பண்பாகு பெயர்

B. எண்ணலளவை ஆகுபெயர்

C. பொருளாகு பெயர்

D. காலவாகு பெயர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 31.** Unanswered

" நல்வினை யார்க்குங் கயிறு " என்று நல்லாதனார் குறிப்பிடுவனவற்றைத் தேர்ந்தெடு,

I. தானம் கொடுத்தல்

II. பழிக்கு நாணி குற்றமற்ற ஒழுக்கத்துடன் வாழ்தல்

III. கல்வி கற்றல்

IV. தெளிந்த சிந்தனை

**குறியீடுகள்**

A. I, II, மற்றும் III

B. II, III மற்றும் IV

C. I, III மற்றும் IV

D. I, II மற்றும் IV

E. விடை தெரியவில்லை

**QUESTION 32.** Unanswered

பிறர் தன்னை உயர்த்திப் பேசும் போது ஒரு சான்றோரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும் எனக் திரிகடுகம் குறிப்பிடுகிறது ?

A. அமைதியாக இருத்தல் வேண்டும் .

B. தகாது என்று நாணுதல் வேண்டும் .

C. வெருளாமல் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் .

D. மற்றவரிடம் அதைப் பற்றிக் கூறுதல் வேண்டும் .

E. விடை தெரியவில்லை

**QUESTION 33.** Unanswered

" செயல்வலி அற்ற ஏவலாளன் " என்பதன் பொருள் யாது ?

A. அதிக வலிமை அற்ற வேலையாள்

B. வேலையே செய்யத் தெரியாத வேலையாள்

C. சோம்பேறியான பணியாள்

D. கூலியின்றி வேலை செய்பவர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 34.** Unanswered

" கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம சிறப்பு " என்னும் தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது ?

A. நன்னெறி

B. நல்வழி

C. கொன்றை வேந்தன்

D. மூதுரை

E. விடை தெரியவில்லை

**QUESTION 35.** Unanswered

" இல்லோர் ஒக்கல் தலைவன் " என்று அடிகளால் சிறப்பிக்கப்படுவர் யார் ?

A. தொண்டைமான்

B. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

C. அதியமான்

D. மலையமான் திருமுடிக்காரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 36.** Unanswered

தற்காலத்தில் எந்த இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது ?

A. ஏ

B. ஓ

C. தான்

D. உம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 37.** Unanswered

மடமை என்ற செல்லின் எதிர்ச்சொல்

A. பேதமை

B. அறியாமை

C. புலமை

D. சிறுமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 38.** Unanswered

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

I. பெயர்ச்சொல் , வினைச் சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச் சொல் .

II. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் அற்றவை

III. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று தொல்காப்பியர் கூறுகிறார் .

A. கூற்று I மட்டும்

B. கூற்றுகள் I மற்றும் II

C. கூற்றுகள் II மற்றும் III

D. கூற்றுகள் I மற்றும் III

E. விடை தெரியவில்லை

**QUESTION 39.** Unanswered

கடி என்னும் உரிச்சொல்லின் குணங்களில் பொருந்தாதது .

A. சிறப்பு

B. வரைவு

C. கரிப்பு

D. செழுமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 40.** Unanswered

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

**கூற்று I** தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுவது ஏவல் வினைமுற்று எனப்படும் .

**கூற்று II** ஏவல் வினைமுற்று பன்மை இடத்தில் மட்டுமே வரும் .

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 41.** Unanswered

பிழையற்றச் சொல்லைத் தேர்த்தெடுக்க .

A. அருகாமை

B. இருப்பவன் யார் ?

C. அறுவறுப்பு

D. அவை அல்ல

E. விடை தெரியவில்லை

**QUESTION 42.** Unanswered

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க .

**சொல் பெயர் வினை**

I . பிந்து - துளி - பின்னிடு

II . வசி - வாள் - தங்கு

III . பூரி - பெருகு - மகிழ்

A. இணைகள் I மற்றும் II மட்டும்

B. இணைகள் II மற்றும் III மட்டும்

C. இணைகள் I மற்றும் III மட்டும்

D. இணைகள் I , II மற்றும் III

E. விடை தெரியவில்லை

**QUESTION 43.** Unanswered

' பழு ' என்ற சொல்லின் பொருள்

A. துன்பம்

B. உண்டாக்கு

C. விலா எலும்பு

D. வசை கூறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 44.** Unanswered

பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க .

I . பஞ்சாய் பறத்தல் - பயனின்றி இருத்தல்

II . அவசரக் குடுக்கை - எண்ணித் துணிந்தவர்

III . தாளம் போடுதல் - சிந்தித்து செயல்படுதல்

IV . கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்

A. I, II மற்றும் III

B. I, II மற்றும் IV

C. II, III மற்றும் IV

D. I, III மற்றும் IV

E. விடை தெரியவில்லை

**QUESTION 45.** Unanswered

' ஆசிரியர் கற்பிக்கும் போதே ஐயங்களைக் கேட்டுத் தெளிதல் மற்றும் இளமையிற் கற்பது ' போன்ற சொற்றொடரின் பொருளை உணர்த்தும் பழமொழி .

A. எறும்பு ஊற கல்லும் தேயும்

B. சுவரை வைத்துதான் சித்திரம் வரைய முடியும்

C. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

D. சுடர் விளக்காயினும் தூண்டுகோள் வேண்டும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 46.** Unanswered

பொருத்துக.

| | |
|---|---|
| a) Intransitive Verb | 1. செய்வினை |
| b) Passive Voice | 2. பயனிலை |
| c) Active voice | 3. செயப்படுபொருள் குன்றிய வினை |
| d) Predicate | 4. செயப்பாட்டு வினை |

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A. | 2 | 3 | 4 | 1 |
| B. | 3 | 4 | 1 | 2 |
| C. | 3 | 1 | 2 | 4 |
| D. | 2 | 1 | 4 | 3 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 47.** Unanswered

'Thesaurus' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்

A. குறியவிழ்ப்பு

B. தொகைச்சொல் நிகண்டு

C. பயன்வழி மாதிரியுரு

D. நிகழ் முறை

E. விடை தெரியவில்லை

**QUESTION 48.** Unanswered

பொருத்துக.

(a) நான்கறிவு உயிரினம் 1. சிப்பி
(b) மூன்றறிவு உயிரினம் 2. எறும்பு
(c) ஈரறிவு உயிரினம் 3. தும்பி

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* |
|---|---|---|---|
| A. | 2 | 1 | 3 |
| B. | 3 | 1 | 2 |
| C. | 3 | 2 | 1 |
| D. | 1 | 2 | 3 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 49.** Unanswered

**கூற்று I** விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று தன்மை இடத்தில் மட்டும் வரும்.

**கூற்று II** இயர் , அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கிலும் , செய்யுள் வழக்கிலும் உள்ளன .

சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. இரண்டும்

B. II மட்டும்

C. I மட்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 50.** Unanswered

**கூற்று 1** வேற்றுமைப்புணர்ச்சியில் ' ல ' கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ' ட ' கரமாகத் திரியும் .

**கூற்று 2** ' ள ' கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ‘ற‘ கரமாகத் திரியும் .

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. கூற்று I மட்டும்

B. கூற்று II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 51.** Unanswered

பின்வருவனற்றுள் பொருந்தாதது எது ?

A. கண்ணுங்கருத்தும்

B. பேரும் புகழும்

C. பச்சைப் பசேல்

D. ஈடு இணை

E. விடை தெரியவில்லை

**QUESTION 52.** Unanswered

பிழையற்றச் சொல்லைத் தேர்ந்தெடுக்க .

A. ஊர்வலம்

B. ஒருகால்

C. கட்டிடம்

D. ஒருக்கால்

E. விடை தெரியவில்லை

**QUESTION 53.** Unanswered

பொருத்துக

a) மறு — 1. சுமை
b) பரி — 2. ஓலைக் கதவு
c) படல் — 3. கயிறு
d) புரி — 4. குற்றம்

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 2 | 1 |
| B. | 3 | 1 | 4 | 2 |
| C. | 2 | 3 | 1 | 4 |
| D. | 4 | 1 | 2 | 3 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 54.** Unanswered

பொருத்துக.

| | |
|---|---|
| a) Ambiguity | 1. முரண் கருத்து |
| b) Antithesis | 2. புத்திலக்கியம் |
| c) Archaism | 3. பொருள்மயக்கம் |
| d) Avant garde | 4. வழக்கொழி சொல் |

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A. | 4 | 2 | 1 | 3 |
| B. | 4 | 3 | 2 | 1 |
| C. | 3 | 1 | 4 | 2 |
| D. | 2 | 4 | 3 | 1 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 55.** Unanswered

' விரை ' என்ற சொல்லின் பொருள்

A. தடுக்கி

B. விதை

C. மணம்

D. மூங்கில்

E. விடை தெரியவில்லை

**QUESTION 56.** Unanswered

சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க .

**கூற்று I** இன்றைய வழக்கில் தன்மை ஒருமை வினைமுற்றில் ' ஏன் ' என்னும் விகுதி மட்டுமே இடம்பெறுகிறது .

**கூற்று II** பேச்சு வழக்கில் ' என் ' விகுதியானது ' ஏன் ' விகுதியைப் போல் இடம் பெறுகின்றன .

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 57.** Unanswered

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு , சாத்தியம் , பொருத்தம் ஆசிய பொருள்களிலும் தகவல்களாகவும் , வதந்தியாகவும் செய்தியைக் கூறப் பயன்படும் இடைச்சொல்

A. கூட

B. ஆம்

C. ஆவது

D. மட்டும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 58.** Unanswered

சரியான இணையைத் தேர்வு செய்க .

I. மூங்கில் - தழை

II. நெல் - தாள்

III. ஈச்சம் - இலை

IV. மா - இலை

**குறியீடுகள்**

A. I, II மற்றும் IV

B. II மற்றும் IV

C. II, III மற்றும் IV

D. III மற்றும் IV

E. விடை தெரியவில்லை

**QUESTION 59.** Unanswered

பிழையானத் தொடரைக் கண்டறிக .

A. பறவைகள் கூட்டமாக பறந்து சென்றன .

B. ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ ? பெரியதோ ? என்று கேட்டல்

C. தென்னை மரங்கள் உள்ள பகுதி தென்னத்தோப்பு என்று கூறுதல்

D. அங்கே வரும் மனிதர் ஆணா ? பெண்ணா ? எனக் கேட்டல்

E. விடை தெரியவில்லை

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு (60-61) பதிலளிக்க**
பயணம் செய்வதில் தமிழர்களுக்கு எப்போதும் பெருவிருப்பம் உண்டு . பயணம் தரைவழி , கடல்
தவியவை கப்பல்களே .
கப்பல் கட்டுவதும் கப்பலைச் செலுத்துவதும் மிகச் சிறந்த தொழில்நுட்பம் சார்ந்த கலைகள் ஆகு
ள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம் ஆகும் .
அந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது . எனவே , தொல்காப்பியர் கா

**QUESTION 60.** Unanswered

பயணத்தின் வகைகள் எத்தனை வகைப்படும்

A. 4

B. 2

C. 3

D. 1

E. விடை தெரியவில்லை

**QUESTION 61.** Unanswered

' முந்நீர் ' என்ற தொகைச் சொல்லின் விரி .

A. ஆற்று நீர் , கடல்நீர் , ஏரி நீர்

B. ஆற்று நீர் , ஊற்று நீர் , மழைநீர்

C. ஆற்று நீர் , நீர் , ஊற்று நீர்

D. ஆற்று நீர் , ஊற்று நீர் , ஏரி நீர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 62.** Unanswered

'Catastrophe' என்ற ஆங்கிலத் சொல்லின் தமிழாக்கம் .

A. காரணம் மற்றும் காரியம்

B. செயல் அல்லது நடிப்பு

C. விளைவு அல்லது முடிவு

D. எண்ணம் அல்லது கருத்து

E. விடை தெரியவில்லை

**QUESTION 63.** Unanswered

பொருந்தாத எதிர்ச் சொல்லைச் கண்டறிக.

A. வெந்நீர் × தண்ணீர்

B. அவல் × பள்ளம்

C. வற்றல் × தளிர்த்தல்

D. ஒடுங்கி × விரிந்து

E. விடை தெரியவில்லை

**QUESTION 64.** Unanswered

நாள் + மீன் – சேர்த் தெழுதுக.

A. நாள் மீன்

B. நாண்மீன்

C. நான்மீன்

D. நாட்மீன்

E. விடை தெரியவில்லை

**QUESTION 65.** Unanswered

**கூற்று I** குறிப்பு வினைமுற்றானது ஆண்பால் , பெண்பால் , ஒன்றன் பால்களுக்கு பொதுவாக வரும் .

**கூற்றும் II** காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் மட்டும் இடம்பெறுகின்றன .

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. கூற்று I மட்டும்

B. கூற்று II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 66.** Unanswered

**கூற்று I** ஏவல் வினைமுற்று விகுதி பெற்றே வரும் .

**கூற்று II** வியங்கோள் வினைமுற்று விகுதி பெற்றும் பெறாமலும் வரும் .

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. கூற்று I

B. கூற்று II

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 67.** Unanswered

'Prosody' என்ற சொல்லின் தமிழாக்கம்

A. அணியிலக்கணம்

B. யாப்பிலக்கணம்

C. எழுத்திலக்கணம்

D. சொல்லிலக்கணம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 68.** Unanswered

எழுவாய்க்கேற்ற வினைமுற்றுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க .

A. நான் சென்றோம்

B. நீ வருகிறாய்

C. அவை வருகிறது

D. அது வருகின்றன

E. விடை தெரியவில்லை

**QUESTION 69.** Unanswered

" என் அம்மை வந்தாள் " என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது ?

A. திணை வழு

B. திணை வழாநிலை

C. திணை வழுவமைதி

D. பால் வழுவமைதி

E. விடை தெரியவில்லை

**QUESTION 70.** Unanswered

பிழையான தொடரைத் தேர்ந்தெடுக்க .

A. கண்ணனும் முருகனும் கோவிலுக்குச் சென்றனர்

B. பூமணி பூமாலையைக் கோர்த்தாள்

C. ராமுவின் பள்ளிக்கூடம் அவனுடைய வீட்டிற்கு அருகில் உள்ளது

D. ஓர் ஊரில் ஒரு புளியமரம் இருந்தது

E. விடை தெரியவில்லை

**QUESTION 71.** Unanswered

'Correlation' என்ற சொல்லுக்கு இணையானத் தமிழ்ச் சொல்

A. ஒத்தியைபு

B. தொடர்பாடல்

C. முடிபு

D. இணைபு

E. விடை தெரியவில்லை

**QUESTION 72.** Unanswered

' நான் கரியென் ' என்பது எவ்வகை வினைமுற்று ?

A. தெரிநிலைப் பெயரெச்சம்

B. தெரிநிலை வினைமுற்று

C. குறிப்பு பெயரெச்சம்

D. குறிப்பு வினைமுற்று

E. விடை தெரியவில்லை

**QUESTION 73.** Unanswered

பொருத்துக.

| | |
|---|---|
| a) உவமை | 1. Verse |
| b) செய்யுள் | 2. Metaphor |
| c) உருவகம் | 3. Metre |
| d) யாப்பு | 4. Simile |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 1 | 2 |
| B. | 4 | 2 | 1 | 3 |
| C. | 2 | 1 | 3 | 4 |
| D. | 4 | 1 | 2 | 3 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 74.** Unanswered

' வாசி ' என்ற சொல்லின் பொருள்

A. மூங்கில்

B. தருக்கி

C. குதிரை

D. வாள்

E. விடை தெரியவில்லை

**QUESTION 75.** Unanswered

" அதிர அடிச்சா உதிர விளையும் " என்ற பழமொழி உணர்த்தும் பொருள்.

A. தன்னால் முடியாத வேலை செய்வது

B. தொடர் முயற்சி வெற்றி தரும்

C. தீயவன் செய்த புண்ணியம்

D. எந்தவொரு செயலையும் போராடி செய்தல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 76.** Unanswered

'Caricature' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் .

A. துணுக்குச் செய்திகள்

B. சிற்றிதழ்கள்

C. கேலிச்சித்திரம்

D. கருத்துப்படம்

E. விடை தெரியவில்லை

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு (77-78) பதிலளிக்க**
தமிழ் இலக்கிய வரலாற்றில் , புலமைக் கதிரவன் எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் (
தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு , வழிபட்டு , செவிதிறந்து கற்றார் . இவர் இயற்றிய சேக்கிழார் ப
பெற்றார் . மாலை , கோவை , கலம்பகம் , பிள்ளைத் தமிழ் ஆகியவற்றைப் பாடி பெருமை அடைந்த

**QUESTION 77.** Unanswered

மீனாட்சி சுந்தரனார் எந்த மடத்தின் தலைமைப் புலவராக இருந்தார் ?

A. திருவாரூர்

B. திருவண்ணாமலை

C. திருவாவடுதுறை

D. திருக்கோவிலூர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 78.** Unanswered

மீனாட்சி சுந்தரனார் இவற்றிய பிள்ளைத்தமிழ் நூல் எது ?

A. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

B. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

C. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

D. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

E. விடை தெரியவில்லை

**QUESTION 79.** Unanswered

தன்மை வினைமுற்றுகளில் ஒருமை பன்மை வேறுபாட்டை உணர்த்துவது எது ?

A. பகுதி

B. விகுதி

C. இடைநிலை

D. சாரியை

E. விடை தெரியவில்லை

**QUESTION 80.** Unanswered

மரபுப் பிழையுள்ளத் சொல்லைக் கண்டறிக .

A. ஆட்டுப்பட்டி

B. யானைக் கொட்டில்

C. கோழிப்பண்ணை

D. குதிரை லாயம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 81.** Unanswered

**கூற்று I** நிர்மலாதான் பாடினாள் என்ற சொற்றொடரில் தான் என்பது இடைச் சொல்லாகப் பயின்று வந்துள்ளது .

**கூற்று II** நிர்மலா தானும் பாடினாள் என்பதில் ' தான் ' தற்சுட்டுத் தன்மை ஒருமை இடப்பெயர் பெயர்ச்சொல்லாக பயின்று வந்துள்ளது .

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. கூற்று I மட்டும்

B. கூற்று II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 82.** Unanswered

'Archive' என்பதன் தமிழ்ச்சொல்.

A. நூல் நிரல்

B. அகராதி நூல்

C. வளைவு

D. காப்பகம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 83.** Unanswered

'Realism' என்பதன் தமிழ்ச்சொல்

A. உணரியல்

B. உளவியல்

C. நடப்பியல்

D. நடிப்பியல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 84.** Unanswered

**கூற்று I** இடைநிலைகள் அமைந்த வினைமுற்றுகள் தெரிநிலை வினைமுற்றுகள் எனப்படும் .

**கூற்று II** பழந்தமிழில் , இப்போது வழக்கில் இல்லாத ஒருவகைத் தன்மை வினைமுற்று இருந்தது .

**கூற்று III** அவ்வினை முற்றுகளுள் இடைநிலை மற்றும் விகுதியைக் கொண்டு காலத்தை உணர்த்தும்

சரியானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க .

A. I மற்றும் III சரி

B. I மற்றும் II சரி

C. II மற்றும் III சரி

D. I, II மற்றும் III சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 85.** Unanswered

பொருத்துக.

| சொல் | பொருள் |
|---|---|
| a) புணை | 1. ஊர் |
| b) புடை | 2. பக்கம் |
| c) புரி | 3. பணைப்பாய் |
| d) புனை | 4. விலங்கு |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 3 | 4 | 2 | 1 |
| B. | 3 | 1 | 4 | 2 |
| C. | 3 | 2 | 1 | 4 |
| D. | 4 | 1 | 3 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 86.** Unanswered

'Didactic' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்

A. வசனக் கவிதை

B. கவிப்பிரிவு

C. அறங்கூறும் கவிதை

D. அகப்பொருள் கவிதை

E. விடை தெரியவில்லை

**QUESTION 87.** Unanswered

அன்பு , அழகு என்பன எவ்வகைச் சொற்கள் ?

A. பெயர் இயற்சொல்

B. உரி இயற்சொல்

C. பெயர் திரிசொல்

D. உரி திரிசொல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 88.** Unanswered

பொருந்தாச் சொல்லைத் தேர்த்தெடுக்க .

A. ஓட்டுநர்

B. அனுப்புனர்

C. குழுவினர்

D. ஊரினர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 89.** Unanswered

**கூற்று I** தொடர்களில் சில சொற்கள் இணையாக இடம்பெற்று பொருளுக்கு வலுவூட்டுவதை இணைச்சொற்கள் என்கிறோம் .

**கூற்று II** இச்சொற்றொடர்களைப் பிரித்தாலோ அல்லது வேறு சொல்லைச் சேர்த்து பயன்படுத்தினாலோ அத்தொடரின் பொருள் மாறுபடாது .

தவறானக் கூற்றைக் கண்டறிக .

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 90.** Unanswered

' பகடி ' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு இணையானத் தமிழ்ச் சொல்

A. parole

B. parody

C. paradox

D. patterns

E. விடை தெரியவில்லை

**QUESTION 91.** Unanswered

பொருந்தாச் சொல்லைக் கண்டறிக .

ராக்கி , யுகம் , டப்பா , லட்டு

A. ராக்கி

B. யுகம்

C. டப்பா

D. லட்டு

E. விடை தெரியவில்லை

**QUESTION 92.** Unanswered

‘ ஞ ’ வரிசையில் சொல்லின் முதலில் வரும் எழுத்துக்கள் எவை ?

i) ஞ

ii) ஞா

iii) ஞே

iv) ஞொ

A. i மற்றும் ii 17684

B. ii, iii மற்றும் iv

C. i, ii மற்றும் iv

D. மேற்கண்ட அனைத்தும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 93.** Unanswered

‘ ஙனம் ’ எனும் சொல்லின் பொருள் என்ன ?

A. அங்கு

B. விதம்

C. மனம்

D. பதம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 94.** Unanswered

தவறான இணையைக் கண்டறிக .

I. மொழி முதல் எழுத்துகள் – 12

II. மொழி இறுதி எழுத்துகள் – 24

A.  I மட்டும்

B. II மட்டும்

C. I மற்றும் II

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 95.** Unanswered

சொல்லின் இடையில் வரும் எழுத்துகளைப் பொறுத்து , தவறான கூற்றைத் தேர்ந்தெடு .

I. மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வருவதில்லை .

II. உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும் .

III. ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும் .

A. I மட்டும்

B. II மற்றும் III

C. III மட்டும்

D. I மற்றும் II

E. விடை தெரியவில்லை

**QUESTION 96.** Unanswered

பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) நெட்டிலை | 1. அடி அகரம் 'ஐ' ஆதல் | | |
| b) பைந்தளிர் | 2. இனமிகல் | | |
| c) செந்தமிழ் | 3. முன் நின்ற மெய் திரிதல் | | |
| d) கருங்கடல் | 4. தன்னொற்றிரட்டல் | | |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 1 | 2 | 3 | 4 |
| B. | 2 | 3 | 1 | 4 |
| C. | 4 | 3 | 2 | 1 |
| D. | 4 | 1 | 3 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 97.** Unanswered

மெய்ம்மயக்கம் தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடு .

I. ' பூ ' என்னும் பெயர் முன்னர் மெல்லினம் மட்டுமே மிகும் .

II. ' புளி ' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி இடையினமும் மிகும் .

III. ' ய ' கர ஈற்றுச் சொற்கள் முன் வல்லினம் மிகும்

IV. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் யரழ முன்னர் மெல்லினம் மிகும்

A. I மட்டும்

B. II மட்டும்

C. III மட்டும்

D. IV மட்டும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 98.** Unanswered

தவறான இணையைக் கண்டறிக .

I. பூ + கொடி = பூங்கொடி

II. பூ + கொடி = பூக்கொடி

III. பூ + தொட்டி = பூந்தொட்டி

IV. பூ + தொட்டி = பூத்தொட்டி

A. I மற்றும் IV

B. II மற்றும் IV

C. I மற்றும் III

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 99.** Unanswered

பிரித்தெழுதுக .

**“ பெருங்குடி ”**

A. பெரும் + குடி

B. பெருமை + குடி

C. பேரு + குடி

D. பெருங்கு + குடி

E. விடை தெரியவில்லை

**QUESTION 100.** Unanswered

சரியான இணையைக் கண்டறிக .

A. ஐங்குறுநூறு = ஐந்து + குறும் + நூறு

B. திருவருட்பா = திரு + அருட்பா

C. சிலப்பதிகாரம் = சில + அம்பு + அதிகாரம்

D. கலம்பகம் = கலம் + பகம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 101.** Unanswered

“ **எம்மருங்கும்** ” என்பதை பிரித்து எழுத கிடைப்பது .

A. எம் + மருங்கும்

B. எ + மருங்கும்

C. எம் + மருங்கு + உம்

D. எம்மருங்கு + உம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 102.** Unanswered

சரியானதைத் தேர்ந்தெடு .

I. கரணத்தேர் = கரணம் + அத்து + தேர்

II. நாத்தொலைவில்லை = நான் + தொலைவு + இல்லை

III. ஈண்டினியான் = ஈண்டு + இனி + யான்

IV. தாய்மையன் பிறனை = தாய்மை + அன் + பிறனை

A. I மட்டும்

B. II மட்டும்

C. III மட்டும்

D. IV மட்டும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 103.** Unanswered

சேர்த்தெழுதுக .

**‘ நாழி + உரி ’**

A. நாழிரி

B. நாழுரி

C. நாடுரி

D. நாவுரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 104.** Unanswered

சரியானததைத் தேர்ந்தெடு .

I. தண்மை + நீர் = தண்ணீர்

II. வெண்மை + நீர் = வெந்நீர்

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 105.** Unanswered

**கூற்று** வெற்றிலை = வெறுமை + இலை = வெற்று + இலை = வெற்றிலை எனப் புணர்ந்தது .

**காரணம்** பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் தன்னொற்றிரட்டல் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும் .

A. கூற்று மற்றும் காரணம் சரி

B. கூற்று மற்றும் காரணம் தவறு

C. கூற்று சரி ; காரணம் தவறு

D. கூற்று தவறு ; காரணம் சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 106.** Unanswered

**கூற்று 1** உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்

**கூற்று 2** உருவகச் சொற்களில் வல்லினம் மிகும் .

A. கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி

B. கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

C. கூற்று 1 சரி ; கூற்று 2 தவறு

D. கூற்று 1 தவறு ; கூற்று 2 சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 107.** Unanswered

பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு .

A. வாழ்க்கைப்படகு

B. இரவுப்பகல்

C. உலாப்பாடினான்

D. வாய்ப்பவளம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 108.** Unanswered

பின்வரும் இணையைக் கருத்தில் கொள்க .

I. உவமைத் தொகை – தமிழ்த்தாய்

II. உருவகம் – தாய்த்தமிழ்

III. உம்மைத் தொகை – உலகப்பந்து

IV. பண்புத் தொகை – வண்ணக்களஞ்சியம்

A. I மற்றும் IV தவறு

B. III மட்டும் சரி

C. II மற்றும் III சரி

D. IV மட்டும் சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 109.** Unanswered

**கூற்று** வடக்கு + கிழக்கு = வடகிழக்கு எனப் புணர்ந்தது .

**காரணம்** திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது .

A. கூற்று மற்றும் காரணம் சரி

B. கூற்று மற்றும் காரணம் தவறு

C. கூற்று சரி ; காரணம் தவறு

D. கூற்று தவறு ; காரணம் சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 110.** Unanswered

பொருந்தாத ஒன்றைக் கண்டறிக .

A. சிலசில

B. சிலச்சில

C. சில்சில

D. சிற்சில

E. விடை தெரியவில்லை

**QUESTION 111.** Unanswered

**கூற்று 1** சே + அடி = சேவடி எனப் புணர்ந்தது .

**கூற்று 2** சே + அடி = சேயடி எனப் புணர்ந்தது .

**கூற்று 3** உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும் .

A. கூற்று 1 மட்டும் தவறு

B. கூற்று 2 மட்டும் தவறு

C. கூற்று 3 மட்டும் தவறு

D. அனைத்து கூற்றுகளும் சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 112.** Unanswered

ஒலி வேறுபாடு அறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடு .

வலி – வழி – வளி

A. காற்று – பாதை – உச்சி

B. வலிமை – பாதை – பழமை

C. நோவு – பழமை – காற்று

D. உச்சி – காற்று – வலிமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 113.** Unanswered

பொருள் கூறு . ‘ **வேள்** ‘

A. ஆயுதம்

B. மன்மதன்

C. காதணி

D. A மற்றும் B

E. விடை தெரியவில்லை

**QUESTION 114.** Unanswered

‘ **வல்லுரம்** ’ என்றச் சொல்லுக்கான பொருளில் மாறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு .

A. காடு

B. வயல்

C. பூங்கொத்து

D. தசை

E. விடை தெரியவில்லை

**QUESTION 115.** Unanswered

பொருத்துக.

| | | |
|---|---|---|
| a) | கள்வி | 1. பசுக்கூட்டம் |
| b) | காளம் | 2. திருடி |
| c) | காலி | 3. நஞ்சு |
| d) | தொளி | 4. சேறு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 1 | 2 | 3 | 4 |
| B. | 2 | 3 | 1 | 4 |
| C. | 4 | 3 | 2 | 1 |
| D. | 4 | 1 | 3 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 116.** Unanswered

ஒலி வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்ந்தெடு .

I. வாளி – இந்திரன் மகனான வானரன் .

II. வாலி – ஒருவகைக் ஆபரணம் .

III. சகளம் – எல்லாம்

IV. சகலம் – காரியத்தாழ்ச்சி

A. I மற்றும் III

B. II மற்றும் IV

C. மேற்கண்ட அனைத்தும்

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 117.** Unanswered

ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக .

**மல்லர் – மள்ளர்**

A. உழவர் – படைவீரர்

B. படைவீரர் – மற்போர்செய்வோர்

C. மற்போர்செய்வோர் – உழவர்

D. படைவீரர் – உழவர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 118.** Unanswered

' ஒரு சாதி , கோயில் , சிற்றூர் , படுக்கை ' எனும் பொருள் தரக்கூடிய சொல்லைக் காண்டறிக .

A. பசளை

B. பளிதம்

C. பள்ளி

D. பூளை

E. விடை தெரியவில்லை

**QUESTION 119.** Unanswered

பொருத்துக.

| | | |
|---|---|---|
| a) குலிசம் | 1. | வச்சிராயுதம் |
| b) குளிசம் | 2. | இரட்சாபந்தனம் |
| c) கூலம் | 3. | கடைவீதி |
| d) கூளம் | 4. | குப்பை |

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A. | 1 | 2 | 3 | 4 |
| B. | 2 | 1 | 4 | 3 |
| C. | 3 | 2 | 1 | 4 |
| D. | 1 | 3 | 4 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 120.** Unanswered

பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைக் கண்டறிக.

கமலன் ____________ நோயினால் பாதிக்கப்பட்டதால் செங்கற் __________ க்குச் செல்லவில்லை.

A. சுளை - சுலை

B. சூலை - சூளை

C. சூளை - சூலை

D. சூழை – சூறை

E. விடை தெரியவில்லை

**QUESTION 121.** Unanswered

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிதல்.
கரும்பின்கட்டி ________________ எனப்படும்.
A. வெல்லம்
B. வெள்ளம்
C. வள்ளம்
D. வேல்லம்
E. விடை தெரியவில்லை

**QUESTION 122.** Unanswered

' ஒலி ; வறுமை ; ஓர்யுகம் ' எனும் பொருள் தரக்கூடிய சொல்லைக் கண்டறிக .

A. கலி

B. பாலை

C. மாள்

D. கேழ்

E. விடை தெரியவில்லை

**QUESTION 123.** Unanswered

சரியான கூற்றைத் தேர்ந்தெடு .

I. தொல்காப்பியர் , ‘ இன எழுத்துகளை இரண்டு வகைப்படும் ’ என்கிறார் .

II. சுட்டுப்பெயர்கள் இடைக்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் பெற்றன .

A.  I மற்றும் II

B. I மட்டும்

C. II மட்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 124.** Unanswered

**கூற்று** சங்க காலத்தில் ‘ அவர்கள் ’ என்பது பலரைக் குறிக்கும் பன்மைச் சுட்டுப்பெயராகும் .

**காரணம்** ஆழ்வார் , நாயன்மார் பாடல்களில் ‘ அவர்கள் ’ என்னும் வழக்கு மிகுதியாக உள்ள து .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 125.** Unanswered

சுட்டு எழுத்துகளைத் தேர்ந்தெடு

A. ஓ , ஆ , உ

B. அ , இ , உ

C. அ , யா , இ

D. எ , யா , ஆ

E. விடை தெரியவில்லை

**QUESTION 126.** Unanswered

**கூற்று 1** அகச்சுட்டில் , சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை .

**கூற்று 2** அண்மைச்சுட்டில் , சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும் .

A. கூற்று 1 மற்றும் 2 சரி

B. கூற்று 1 மட்டும் தவறு

C. கூற்று 2 மட்டும் தவறு

D. கூற்று 1 மற்றும் 2 தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 127.** Unanswered

தவறான கூற்றைத் தேர்ந்தெடு .

I. சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே இருந்து சுட்டுப்பொருளைத் தருவது ‘ அகச்சுட்டு ’ எனப்படும் .

II. சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளே இருந்து சுட்டுப்பொருளைத் தருவது ‘ புறச்சுட்டு ’ எனப்படும் .

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 128.** Unanswered

**கூற்று** சுட்டு எழுத்துகள் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது ‘ சுட்டுத்திரிபு ’ எனப்படும் .

**காரணம்** அ , இ ஆகிய சுட்டு எழுத்துகள் அதை , இதை எனத் திரிந்து வழங்கப்படுகின்றன .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 129.** Unanswered

‘ இவன் , அவன் , இது , அது ’ ஆகிய இச்சொற்கள் எவ்வகை சுட்டெழுத்துகளில் வருமென க ண்டறிக .

i) அகச்சுட்டு

ii) புறச்சுட்டு

iii) அண்மைச்சுட்டு

iv) சேய்மைச்சுட்டு

v) சுட்டுத்திரிபு

A. i, iii, iv

B. i, iii, v

C. iii, iv, v

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 130.** Unanswered

சரியான இணையைத் தேர்ந்தெடு .

A. இம்மலை – புறச்சுட்டு

B. அவ்வானம் – அண்மைச்சுட்டு

C. இந்நூல் – சேய்மைச்சுட்டு

D. உப்பக்கம் – சுட்டுத்திரிபு

E. விடை தெரியவில்லை

**QUESTION 131.** Unanswered

**கூற்று** எந்தப் புத்தகங்களும் தீமையை போதிக்காது .

**காரணம்** எந்த என்று வந்தால் அதன் பிறகு பன்மை வர வேண்டும் .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 132.** Unanswered

ஒருமை , பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க

A. நிறைய பிரச்சினைகள் உள்ளன

B. அங்கு கிழிந்த துணிகள் குவிந்திருக்கிறது

C. மாடுகள் புல்லை மேய்கிறது

D. கண்ணன் பாடம் படிக்கிறார்

E. விடை தெரியவில்லை

**QUESTION 133.** Unanswered

புத்தகம், மேசை ___________ அங்கே உள்ளன.

I. இரண்டும்

II. ஆகியவை

III. அவை

IV. இவற்றை

A. III

B. II

C. IV

D. I

E. விடை தெரியவில்லை

**QUESTION 134.** Unanswered

பிழையான தொடரைத் தெரிவு செய்க .

A. கீரைகளில் இரும்புச்சத்து உள்ளது

B. மாணவர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள் .

C. வெற்றி பெற்றவர்கள் பரிசு பெற்று மகிழ்ந்தார்கள்

D. எந்த வீட்டிலும் நூலகம் இல்லை

E. விடை தெரியவில்லை

**QUESTION 135.** Unanswered

தவறான இணையைக் காண்க .

I. ஒன்று + மரம் = ஓர் மரம்

II. ஒன்று + ஆடு = ஓர் ஆடு

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும் தவறு

D. இரண்டும் சரி

E. விடை தெரியவில்லை

**QUESTION 136.** Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

**கூற்று 1** மக்கள் , பறவை , விலங்கு ஆகியவை உயர்திணை எனப்படும் .

**கூற்று 2** நிலம் , நீர் , நாற்காலி ஆகியவை அஃறிணை எனப்படும் .

**குறியீடுகள்**

A. கூற்று 1 மற்றும் 2 சரி

B. கூற்று 1 மட்டும் தவறு

C. கூற்று 2 மட்டும் தவறு

D. கூற்று 1 மற்றும் 2 தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 137.** Unanswered

**கூற்று** ஒன்று + ஆசிரியர் = ஓர் ஆசிரியர் .

**காரணம்** ஒன்று என்னும் நிலைமொழியின்முன் , வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் ஓர் என மாறும் .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 138.** Unanswered

அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க .

A. கபிலன் , வள்ளி , வீரன் , அறிஞர் , சிவன்

B. அறிஞர் , கபிலன் , சிவன் , வள்ளி , வீரன்

C. வீரன் , வள்ளி , அறிஞர் , கபிலன் , சிவன்

D. கபிலன் , அறிஞர் , சிவன் , வள்ளி , வீரன்

E. விடை தெரியவில்லை

**QUESTION 139.** Unanswered

பொருத்துக.

| | |
|---|---|
| a) மாணவர் | 1. பலவின்பால் |
| b) செடிகள் | 2. ஒன்றன்பால் |
| c) கபிலன் | 3. ஆண்பால் |
| d) புறா | 4. பலர்பால் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 1 | 2 | 3 | 4 |
| B. | 2 | 1 | 4 | 3 |
| C. | 4 | 1 | 3 | 2 |
| D. | 1 | 3 | 4 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 140.** Unanswered

**கூற்று** உயர்ந்த ஒழுக்கம் உடைய தேவர்களைக் குறிப்பது உயர்திணையாகும் .

**காரணம்** இவர்கள் மற்ற உயிரினும் நன்மை , தீமையைப் பிரித்து அறிவதுடன் உயர்ந்த ஒழுக்கமுடையவர் .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 141.** Unanswered

ஒரு/ஓர் ஆகிய இரண்டையும் ___________சொற்களுக்குமுன் பயன்படுத்த வேண்டியதில்லை.

a. பலவின்பால்
b. அஃறிணை
c. உயர்திணை
d. பலர்பால்

A. a, b
B. c, d
C. a, d
D. b, c
E. விடை தெரியவில்லை

**QUESTION 142.** Unanswered

பொருத்துக.

a) உயர்திணை ஆண்பால் — 1. உது
b) உயர்திணை பெண்பால் — 2. அவர்
c) உயர்திணை பலர்பால் — 3. உவன்
d) அஃறிணை ஒருமை — 4. அவை
e) அஃறிணை பன்மை — 5. இவள்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A. | 3 | 5 | 2 | 1 | 4 |
| B. | 2 | 1 | 4 | 3 | 5 |
| C. | 4 | 1 | 3 | 2 | 5 |
| D. | 5 | 3 | 4 | 2 | 1 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 143.** Unanswered

அருகில் உள்ளவற்றிற்கும், தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பவரைச் சுட்டிக் காட்ட பயன்படும் சுட்டெழுத்து ________

A. அவன்
B. உவன்
C. இவன்
D. எவன்
E. விடை தெரியவில்லை

**QUESTION 144.** Unanswered

**கூற்று** கொக்கு + பறந்தது = கொக்குப்பறந்தது

**காரணம்** ' கொக்கு ' எனும் எழுவாய் மென்தொடர்க் குற்றியலுகரமாக இருப்பதால் வல்லினம் மிகும் .

A. கூற்று சரி , காரணம் சரி

B. கூற்று சரி , காரணம் தவறு

C. கூற்று தவறு , காரணம் சரி

D. கூற்று தவறு , காரணம் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 145.** Unanswered

பிரித்து எழுதுக.

எண்கினங்கள் =________________

A. எண் + இனங்கள்

B. எண்கி + இனங்கள்

C. எண் + இனம் + கள்

D. எண்கு + இனங்கள்

E. விடை தெரியவில்லை

**QUESTION 146.** Unanswered

ஈறு போதல் இடைஉகரம் __________ ஆதல்

A. ஆ

B. இ

C. ஐ

D. உ

E. விடை தெரியவில்லை

**QUESTION 147.** Unanswered

பின்வரும் இணைகளில் சரியானவற்றைக் கண்டறிக .

**ஒரு சொல் பலபொருள்**

A. கண்டம் – கழுத்து , ஆபத்து

B. ஆலம் – விடம் , ஆலாபனம்

C. காடு – இறும்பு , வ ள்ளை

D. உரை – சொல் , வ சி

E. விடை தெரியவில்லை

**QUESTION 148.** Unanswered

‘ மருள் ’ என்பதன் எதிர்ச்சொல் காண்க ?

A. அச்சம்

B. தெளிவு

C. மயக்கம்

D. கருணை

E. விடை தெரியவில்லை

**QUESTION 149.** Unanswered

‘ ஸ்பா ’ என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் என்ன ?

A. சபை

B. ச பா

C. சிகை அலங்காரம்

D. த ப சு

E. விடை தெரியவில்லை

**QUESTION 150.** Unanswered

தவறான கூற்றினைக் கண்டறிக .

A. ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்க ள் பயனிகளைக் கொண்டு முடிவது தனிநிலைத் தொடராகும் .

B. குமரன் அருணைக்குச் சென்றான் என்பது ஒரு தனிநிலைத் தொடராகும் .

C. ஒரு எழுவாய் பல பயனிலைக் கொண்டு முடிவது தொ டர்நிலை தொடர் ஆகும் .

D. ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியமாகும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 151.** Unanswered

தவறான இணையைக் கண்டறிக.

I) அட்டெண்டன்ஸ் – சேர்க்கைப் பதிவு

II) தீக்கை – பிச்சை

III) அலமாரி – நிலைப்பேழை

IV) கர்னன் – கண்ணன்

**குறியீடுகள்**

A. IV மட்டும்

B. I மற்றும் II மட்டும்

C. I மற்றும் IV மட்டும்

D. II மற்றும் IV மட்டும் .

E. விடை தெரியவில்லை

**QUESTION 152.** Unanswered

“ தமி ழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் அனைவரும் முன்னேற முயல வேண்டும் ” – என்பது எவ்வகை வாக்கியம் ?

A. தனிநிலை வாக்கியம்

B. தொ டர்நிலை வாக்கியம்

C. செய்தி வாக்கியம்

D. கலவை வாக்கியம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 153.** Unanswered

பொருத்துக.

| சொல் | பொருள் |
|---|---|
| (a) காயம் | 1. ஆண் சிங்கம் |
| (b) ஏறு | 2. வலிமை |
| (c) எகினம் | 3. நிலைபேறு |
| (d) உரம் | 4. புளியமரம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 1 | 2 |
| B. | 3 | 4 | 1 | 2 |
| C. | 1 | 4 | 3 | 2 |
| D. | 3 | 1 | 4 | 2 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 154.** Unanswered

“ பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் உயர்த்தல் வேண்டும் " என்ற முழக்கத் திற்குரியவர் ?

A. திவ்யக்கவி

B. அமரக்கவி

C. புரட்சிக்கவி

D. ஆஸ்தானக்கவி

E. விடை தெரியவில்லை

**QUESTION 155.** Unanswered

மொழிப்பெயர்ப்பு தொடர்பான தவறான இணையைக் கண்டறிக.

A. Pay Special attention – சிறப்பு கவனம் செலுத்துதல்

B. Walked ou t – வெளிநடப்புச் செய்தல்

C. Citizenship Tr aining – குடிமைப் பயிற்சி

D. Bibliothque Nationale – தேசிய கூடம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 156.** Unanswered

அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (செயல்)

A. வினைவலியும் __________ தன்வலியும்

B. மாற்றான் வலியும் __________ வலியும்

C. பகை வலியும் துணைச் __________ வலியும்

D. துணைவலியும் தூக்கி __________

E. விடை தெரியவில்லை

**QUESTION 157.** Unanswered

பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க:

மன_____ச்சல் தீரவும், வீட்டில் _____ கொதிக்கவும், _____க்க வேண்டும்.

A. உழை, உளை, உலை

B. உளை, உலை, உழை

C. உலை, உழை, உளை

D. உளை, உழை, உலை

E. விடை தெரியவில்லை

**QUESTION 158.** Unanswered

**கூற்று I** அறுவடைத் திருநாள் ஆந்திரம் , இராஜஸ்தான் , மராட்டியம், உத்திரப் பிரதேசத்தில் “ மகர சங்கராந்தி ” என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது .

**கூற்று II** பஞ்சாப் மாநிலத்தில் “ உத்தராயன் ” என்று கொண்டாடப்படுகிறது .

**குறியீடுகள்**

A. கூற்று I சரி , தவறு II

B. கூற்று I தவறு , II சரி

C. இரண்டும் சரி

D. இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 159.** Unanswered

“ ஆக்ஸிடெண்ட் ” என்ற ஆங்கிலச் சொல்லிற்குறிய தமிழ்ச்சொல்லை எழுதுக .

A. விபத்து

B. இடர்

C. நேர்ச்சி

D. இழப்பு

E. விடை தெரியவில்லை

**QUESTION 160.** Unanswered

நாட்டுப்புறப் பாடல்களில் பெருந்தாததைக் கண்டறிக .

A. ஒப்பாரிப் பாடல்கள்

B. சடங்குப் பாடல்கள்

C. குழந்தைப் பாடல்கள்

D. தொழிற்பாடல்கள்

E. விடை தெரியவில்லை

**QUESTION 161.** Unanswered

முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக .

A. விரதம் கொல்லா குறியாகக் கொள்கை பொய்யா நெறியாக

B. குறியாகக் கொள்கை பொய்யா நெறியாக கொல்லா விரதம்

C. கொல்லா விரதம் குறியாகக் கொள்கை பொய்யா நெறியாக

D. கொள்கை நெறியாக பொய்யா விரதம் கொல்லா குறியாக

E. விடை தெரியவில்லை

**QUESTION 162.** Unanswered

எதிர்ச்சொல் தருக .

குற்றேவல்

A. சிறிய வேலை

B. பெரிய வேலை

C. நிரந்தர வேலை

D. ஒப்பந்த வேலை

E. விடை தெரியவில்லை

**QUESTION 163.** Unanswered

சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு

எழுத்துமொழியில் காலம், இடம் ஆகியவற்றுக்கு ஏற்ப சொற்கள் சிதைவதில்லை __________ வரிவடிவம் மாறுபடும்.

A. மற்றும்

B. ஆனால்

C. ஆகையால்

D. எனவே

E. விடை தெரியவில்லை

**QUESTION 164.** Unanswered

பொருத்துக.

(a) சித்திரக்கவி — 1. நால்வகைக் கவிகளையும் பாடவல்லவர்
(b) மதுரக்கவி — 2. சொல்லணி அமைத்து சுவை வளம் செழிக்கப் பாடுபவர்
(c) பாவலரேறு — 3. தொடர்நிலை செய்யுள் (ம) தூய காப்பியங்களை இயற்றுபவர்
(d) வித்தாரக்கவி — 4. செவிக்கினிய ஓசைநிலம் சிறக்கப் பாடுபவர்

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 2 | 4 | 1 | 3 |
| B. | 1 | 4 | 2 | 3 |
| C. | 3 | 2 | 1 | 4 |
| D. | 4 | 3 | 1 | 4 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 165.** Unanswered

முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக .

A. மாட்டிய இரவில் நெகிழி இலங்குசுடர்

B. நெகிழி மாட்டிய இலங்குசுடர் மாட்டிய

C. இரவில் மாட்டிய இலங்குசுடர் நெகிழி

D. மாட்டிய இலங்குசுடர் நெகிழீ இரவில்

E. விடை தெரியவில்லை

**QUESTION 166.** Unanswered

**கூற்று I** சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்கு மாற்றாக வேறெழுத்து அமைந்து அதே பொருளைத் தருவது கடைப்போலி .

**கூற்று II** அஃறிணைப் பெயர்களின் இறுதியில் மகர எழுத்திற்குப் பதிலாக ரகரம் வரும்

A. கூற்று I சரி , II தவறு

B. கூற்று இரண்டும் சரி

C. கூற்று II மட்டும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

E. விடை தெரியவில்லை

**QUESTION 167.** Unanswered

‘ கிராமம் ’ என்பதன் தூய தமிழ்ச்சொல் என்ன?

A. ஊர்

B. சிற்றூர்

C. பேரூர்

D. குடியிருப்பு

E. விடை தெரியவில்லை

**QUESTION 168.** Unanswered

தவறான இணையைக் கண்டறிக

A. முற்றுப்போலி – மூணு

B. கடைப்போலி – பந்தர்

C. முதற்போலி – மைஞ்சு

D. இடைப்போலி – அரையர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 169.** Unanswered

அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (நெடுநல்வாடை)

A. கோல _________ கோல்குறிஞ்சிப் பட்டினப்பாலை

B. கோல்குறிஞ்சி _________கோல பட்டினப்பாலை

C. பட்டினப்பாலை கோலக் குறிஞ்சி _________

D. இனிய _________ கோல்குறிஞ்சிப் பட்டினப்பாலை

E. விடை தெரியவில்லை

**QUESTION 170.** Unanswered

தவறான இணையைக் காண்க .

A. ஆரளி – வண்டு

B. இந்தளம் – இசை

C. கொண்டல் – முகில்

D. நோன்மை – வறுமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 171.** Unanswered

‘ துஞ்சல் ’ என்னும் பொருள் தரும் சொல் ?

A. சோர்வு

B. சோம்பல்

C. உயர்வு

D. தீமை

E. விடை தெரியவில்லை

**QUESTION 172.** Unanswered

அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க

அஃது , அங்கு , அம்பக்கம் , அன்று , அஃதினார்

A. அஃது , அஃதிலார் , அங்கு , அப்பக்கம் , அன்று

B. அஃதிலார் , அங்கு , அன்று , அஃது , அப்பக்கம்

C. அஃதிலார் , அஃது , அங்கு , அப்பக்கம் , அன்று

D. அங்கு , அப்பக்கம் , அன்று , அஃதிலார் அஃது

E. விடை தெரியவில்லை

**QUESTION 173.** Unanswered

பின்வருவனவற்றில் மழைக்கால மலர்களில் பொருந்தாதது எது ?

A. முல்லை

B. நெய்தல்

C. காயா

D. ஆம்பல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 174.** Unanswered

செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் கூடத் துன்பம் தருவதாகும்.
__________ அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

A. மறுமை

B. வறன்

C. தொல்லை

D. இன்மை

E. விடை தெரியவில்லை

**QUESTION 175.** Unanswered

சொல்லின் முதல் , இடை , இறுதியில் ஓர் எழுத்திற்கு பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெறுவது ?

A. முதற்போலி

B. முற்றுப்போலி

C. போலி

D. கடைப்போலி

E. விடை தெரியவில்லை

**QUESTION 176.** Unanswered

பொருந்தா இணையைக் கண்டறிக

A. எகினம் – அன்னம்

B. ஏணம் – பன்றி

C. அரி – வண்டு

D. அரவம் – பாம்பு

E. விடை தெரியவில்லை

**QUESTION 177.** Unanswered

" மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் , சரளிப்புத்தகம் , புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்கள் பிரான்சு தேசிய நூற்கூடத்தில் உள்ளன என்று கூறியவர் ?

A. கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி

B. நிக்கலஸ் ஸ்ரனிசுலா

C. மாயூரம் வேதநாயகம்

D. மறைமலை அடிகள்

E. விடை தெரியவில்லை

**QUESTION 178.** Unanswered

பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க

காட்டு விலங்குகளைச் __________தடை செய்யப்பட்டுள்ளது.

செய்த தவறுகளைச் __________ திருந்த உதவுகிறது.

A. தொடுதல், தொடுத்தல்

B. சுட்டல், சுடுதல்

C. காணுதல், காட்சி

D. சுடுதல், சுட்டல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 179.** Unanswered

அனிதா கடைக்குச் சென்று ஐஸ் வாட்டர் , கூல் டிரிங்ஸ் வாங்கியதோடு பூஜைக்கு தேவையான புஷ்பத்தை வாங்கி வந்தாள் .

மேற்கண்ட கூற்றில் அடிக்கோடிட்ட பிறமொழிச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்லை முறையாகக் கண்டறிக .

A. குளிர்சாறு , குளிர்நீர் , புட்பம் , வழிபாடு

B. புட்பம் , வழிபாடு , குளிர்சாறு , குளிர்நீர்

C. குளிர்நீர், குளிர்சாறு , வழிபாடு , புட்பம்

D. வழிபாடு , குளிர்ச்சாறு குளிர்நீர் , புட்பம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 180.** Unanswered

‘ வைகறை துயிலெழு ’ என்பது எவ்வகை வாக்கியம் ?

A. செய்தி வாக்கியம்

B. தனி வாக்கியம்

C. தொடர் வாக்கியம்

D. கலவை வாக்கியம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 181.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத தொடரினைத் தேர்ந்தெடு .

A. உடன்பாட்டுத்தொடர்

B. எதிர்மறைத்தொடர்

C. செய்வினைத்தொடர்

D. தொடர்நிலைத்தொடர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 182.** Unanswered

‘ கிராமம் ’ என்னும் சொல் எவ்வகை மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டது ?

A. இயற்சொல்

B. திசைச்சொல்

C. திரிச்சொல்

D. வடசொல்

E. விடை தெரியவில்லை

**QUESTION 183.** Unanswered

‘ செய்வினைத் தொடர் ’ பற்றிய கூற்றுகளில் பொருந்தாதது எது ?

A. எழுவாய் , செயப்படுபொருள் பயனிலை என்று வரிசையில் வாக்கியம் அமைதல் வேண்டும் .

B. செயப்படுபொருளோடு மூன்றாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டோ அல்லது பல தொடர்களில் மறைந்தோ வரும்

C. எழுவாய் , செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடராகும் .

D. கவிதா உரை படித்தாள் என்பது செய்வினைத் தொடருக்கான எடுத்துக்காட்டு ஆகும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 184.** Unanswered

கொடுக்கப்பட்ட தொடரினை நிறைவு செய்க.

குழலினும் யாழினும் குரல்முதல் __________

A. இரண்டும்

B. ஏழும்

C. எட்டும்

D. பத்தும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 185.** Unanswered

பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.
மலை முகட்டில் மேகம் ________ அதைப் பார்க்கும் மனங்கள் செல்ல ________

A. தங்கும், தயங்கும்

B. தவழும், படியும்

C. கூடும், தயங்கும்

D. சேரும், கூடும்

E. விடை தெரியவில்லை

**QUESTION 186.** Unanswered

அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க, (செய்வினை)

A. உழுந்தும் உழவே ________

B. ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் ________

C. சான்றோர் பழிக்கும் ________

D. பெருகலின் குன்றம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 187.** Unanswered

‘ தென் ஆரிநாடு ’ என்பது கீழ்க்கண்ட எந்த ஊரினைக் குறிக்கும் ?

A. ஆற்காடு

B. திருமலை

C. குற்றாலம்

D. அழகர் மலை

E. விடை தெரியவில்லை

**QUESTION 188.** Unanswered

கான மஞ்ஞை யறையீன் முட்டை என்ற பாடல் வரியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன ?

A. அன்னம்

B. மயில்

C. குருகு

D. பருந்து

E. விடை தெரியவில்லை

**QUESTION 189.** Unanswered

தவறான இணையைக் கண்டறிக .

**சொல் பொருள்**

A. கவிகை – குடை

B. சாடு – பாய்

C. அயம் – பிரமன்

D. நிரையம் – நரகம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 190.** Unanswered

பிரித்தெழுதுக.

தணிப்பரிய

A. தணி + அரிய

B. தணி + பரிய

C. தணிப்பு + அரிய

D. தணிந்த + அரிய

E. விடை தெரியவில்லை

**QUESTION 191.** Unanswered

பொருத்துக

| | சொல் | பொருள் |
|---|---|---|
| (a) | புனல் | 1. தோள் |
| (b) | புயல் | 2. நீர் |
| (c) | புலம் | 3. மேகம் |
| (d) | புயம் | 4. நிலம் |

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A. | 2 | 4 | 3 | 1 |
| B. | 3 | 2 | 4 | 1 |
| C. | 2 | 1 | 3 | 2 |
| D. | 2 | 3 | 4 | 1 |

E. விடை தெரியவில்லை

**QUESTION 192.** Unanswered

‘ சீவலமங்கை சீவலம்பேரி ’ என்று வழங்கப்படும் ஊர் ?

A. ஆழ்வார் திருநகரி

B. திருமுக்கூடல்

C. திருஆலவாய்

D. திருச்சீரலைவாய்

E. விடை தெரியவில்லை

**QUESTION 193.** Unanswered

‘ பணங்கள் ’ என்பதன் பொருள் என்ன ?

A. நோட்டுகளாக உள்ள பணம்

B. நாணயங்களாக உள்ள பணம்

C. மெய்நிகர் பணம்

D. பரிமாற்றத்தின் ஊடகம்

E. விடை தெரியவில்லை

**QUESTION 194.** Unanswered

சரியானது இணைப்புச் சொற்களைக் கண்டறிக.

பெண் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாய் இருப்பது குழந்தை திருமணம் ________ அதைத் தடுக்க சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது

A. ஆகையால்

B. அதனால்

C. எனவே

D. ஏனெனில்

E. விடை தெரியவில்லை

**QUESTION 195.** Unanswered

எவ்வகை வாக்கியம் எனக் காண்க

நாகம் இடியோசையைக் கேட்டது . நாகம் நடுநடுங்கியது

A. தொடர் வாக்கியம்

B. தனி வாக்கியம்

C. கலவை வாக்கியம்

D. எதிர்மறை தொடர்

E. விடை தெரியவில்லை

**QUESTION 196.** Unanswered

தென் பாண்டிச்சீமை சார்ந்த பகுதிகளின் மரூஉ பெயர்களில் பொருந்தாதது எது ?

A. முகவை

B. விருதை

C. மதிரை

D. நாஞ்சி

E. விடை தெரியவில்லை

**QUESTION 197.** Unanswered

‘ ஏ ஜெ ன்ஸி ’ என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் என்ன ?

A. அங்காடி

B. நிறுவனம்

C. முகவாண்மை

D. அமைப்பு

E. விடை தெரியவில்லை

**QUESTION 198.** Unanswered

“ வதுவையின் மனை யெ ன இருந்த மாநகர் ”

அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது ?

A. அகவை

B. திருமணம்

C. சுற்றம்

D. மதில்

E. விடை தெரியவில்லை

**QUESTION 199.** Unanswered

‘நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு’ ______ என்ற பாடல் வரிக்கு உரியவர்?

A. நன்னூலார்

B. தொல்காப்பியர்

C. தமிழ் மகள்

D. தண்டி

E. விடை தெரியவில்லை

**QUESTION 200.** Unanswered

பிரித்தெழுதுக

பதினெண்க்கீழ்க்கணக்கு

A. பதினெண் + கீழ் + கணக்கு

B. பதின் + எண் + கீழ்+ கணக்கு

C. பதின் + கீழ்க்கணக்கு

D. பதின் + கீழ்க்கணக்கு

E. விடை தெரியவில்லை

## Review in